**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 101/2022** **நாள்.03.04.2024**

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 03 நாள் பிரதிவாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நரேஷ்குமார் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சிவலிங்கம் | சாதி | |
| கிராமம் | சென்னை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 39 |

**பி.சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் 1 -ம் சாட்சி ஆவேன். நான் **பி.சா.1 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1.பி.த.சா.ஆ.1 - 22.10.1979 தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல்.

2. பி.த.சா.ஆ.2 - 26.07.1980 தேதியிட்ட 2 ம் பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழ் அசல்.

3. பி.த.சா.ஆ.3 - 12.06.1984 தேதியிட்ட 3 ம்பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழ் அசல்.

4. பி.த.சா.ஆ.4- 03.09.1984 தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல்.

5. பி.த.சா.ஆ.5 -02.03.1988 தேதியிட்ட கிரை யபத்திரம் சான்றிட்ட நகல்.

6. பி.த.சா.ஆ.6 - 11.06.1990 தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல்.

7. பி.த.சா.ஆ.7 -10.07.2020 தேதியிட்ட தமிழ்நாடு அரசு குடிசை மாற்று வாரியம் வழங்கிய குடியிருப்பு ஒதுக்கீடு சான்று அசல்.

8. பி.த.சா.ஆ.8 -சிவலிங்கம் என்பவர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்கள் அசல்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்)

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**